உ
சிவமயம்

# இந்துசாதனம்

சைவ பரிபாலன சபை வெளியீடு. பிரதி விலை: சதம் 20

ஆரம்பம்: விரோதி ஞு (1889) ஆவணிமீ 28-ம் வ அச்சகம்: சைவப்பிரகாச அச்சியந்திரசாலை, 450. காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356


புத்-அசு] யாழ்ப்பாணம்:- ஆனந்த ஞு ஆவணிமீ கசு-உ வெள்ளிக்கிழமை (30 8-1974) [இல: கக

# சற் பாத்திரருக்குத் தருமஞ் செய்யும் நற் சன சமூக சேவையாளன்

### தொழில் அதிபர்

## திரு. க. கனகராசாவுக்குப் பெரும் பாராட்டு

மில்க்வைற் சவர்க்காரத் தொழிலக உரிமையாளர் திரு. க. கனகராசா அவர்கள் நேற்று (29-8-74) யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்ற தற்காலிக நீதிபதி மாண்புமிகு. எஸ். கனகரத்தினம் அவர்கள் முன்னிலையில் சமாதான நீதிபதியாக சத்தியப் பிரமாணஞ் செய்துகொண்டார்கள். இவ் வைபவத்தில் பெருந் திரளான மக்கள் கலந்துகொண்டு அன்னாரை வாயார வாழ்த்தினர்கள்.



இலங்கை அரசினரால் சமாதான நீதிபதியாக நியமித்துக் கௌரவிக்கப் பெற்ற சிவநெறிப் புரவலர், 'சிவதருமபூபதி' சிவத் தமிழ்ச் செல்வர், 'பூவுலக கற்பகதரு நாயகர்' திரு. க. கனகராசா அவர்கள் யாழ். மாவட்ட நீதிமன்றத்தில் சத்தியப் பிரமாணஞ் செய்துகொண்டபொழுது அவரது அன்பர்கள், ஆதரவாளர்கள், சக தொழில் அதிபர்கள், சமய மன்றங்களின் பிரதிநிதிகள், சட்டத்தரணிகள் பலர் அவரை வாழ்த்தி மலர்மாலை அணிவித்தார்கள். யாழ் மாவட்ட நீதிமன்ற முன்றல் விழாக் கோலம் பூண்டு காணப்பட்டது என்று கூறின் மிகையாகாது.

சத்தியப்பிரமாண வைபவத்தையடுத்து திரு. க. கனகராசா தம்பதிகள் கோட்டை முனியப்பர் ஆலயம், யாழ். சிவன் கோவில் ஆகிய இடங்களில் வழிபாட்டை முடித்துக்கொண்டு தங்கள் இல்லம் திரும்புகையில் வழிநெடுகிலும் பல அன்பர்கள் மலர்மாலை அணிவித்து தங்கள் வாழ்த்தைத் தெரிவித்துக் கொண்டார்கள். வண்ணை கலா ஜோதி சனசமூக முன்றலில் பெருந்திரளான அன்பர்கள் கூடி நின்று திரு. கனகராசா தம்பதிகளை ஊர்வலமாக அழைத்துச் சென்றார்கள்.

அரசியற் சார்பற்ற பொது சேவையாளர் ஒருவர் இத்தனை பெரும் வரவேற்பைப்பெற்றது இதுவே யாழ்ப்பாண வரலாற்றில் முதற் சம்பவமாக இருக்கும் என்று ஒரு அன்பர் கருத்துத் தெரிவித்தார். மேலும் அந்த அன்பர் "என் நினைவிற் கெட்டியவரை சமூகசேவையாளர் ஒருவருக்கு இத்தனை தொகை மாலைகள் அணிவிக்கப்பட்டதும் இதுவே முதற் தடவையாகும்" என்றார்.

திரு. கனகராசா அவர்களது இல்லத்தில் பெருந் தொகையில் கூடி நின்ற அன்பர்கள் நடாத்திய வரவேற்பு வைபவத்தில் பல பெரியார்கள் உரை நிகழ்த்தினர்கள்.

இவ் விழாவின்போது பண்டிதமணி வித்துவான் சுப்பையபிள்ளை, சமூகத் தொண்டர் இ. பி. இராசையா ஜே. பி. பொறியியலாளர் திரு. இ. வைத்திலிங்கம், வட்டாரக் கல்வியதிகாரி திரு வ. நடராசா அவர்கள், தீவுப் பகுதி ஆசிரியப் பெரியார்கள் பலர் சிறப்புரையாற்றினர்கள். விழாவில் வந்திருந்த பலருக்கும் திரு. க. கனகராசா ஜே பி. அவர்கள் நன்றி கூறினர்கள். திருநீறறுப்பை அன்பளிப்பு செய்தார்கள்.

பனை ஓலைச் சுவடியில் வாழ்த்துக்கள் அச்சிட்டு மில்க்வைற் தொழிலாளர்களால் வழங்கப்பட்டது. திரு க. கனகராசா அவர்கள் எல்லோருக்கும் திருக்கேதீஸ்வரநாதரின் மூவர்ணச் சித்திரப் பட்டம் அன்பளிப்புச் செய்து தேநீர் விருந்தளித்துச்சிறப்பித்தார்கள்.

## இந்து யோக நிலைய சத்சங்கக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம் இந்துயோக நிலையச் சார்பில் அதன் தலைவர் சிவ. உ. சோமசேகரம் M. A. அவர்கள் தலைமையில் 1-9-74 ஞாயிறு மாலை 6 மணியளவில், சித்தாந்த கலாநிதி க. கணபதிப்பிள்ளை B. A. "மரணத்தின் பின் என்ன?" என்னும் பொருள்பற்றி உரையாற்றுவார்.

## ஊற்று இலவசம்

"ஊற்று" என்ற விவசாயப் புத்தகத்தின் பழைய பிரதிகளை யாழ்ப்பாணம் மில்க் வைற் சவர்க்காரத் தொழிலகத்தார் இலவசமாக வழங்குகிறார்கள். விவசாயக் கழகங்கள பொதுசன மன்றங்கள், சனசமுகநிலையங்கள் ஆதியன அத்தாட்சிப் பத்திரங் கொடுத்துப் பெறலாம்.

## சமயறிவுப் போட்டி

வழக்கம்பறை சனசமூக பஜனைச் சபையினர் 'நிலையக் குரல்' மூலம் நடாத்திய சமய அறிவுப் போட்டியில் பங்கு கொண்டு முதல் மூன்று பரிசுகளையும் பெறுபவர்கள் விபரம் பின்வருமாறு:

அதிமேற்பிரிவு:- 1ம் பரிசு: செல்வி வசந்தகௌரி சண்முகராசா, 54, கொழுட்புத்துறை வீதி, பாண்டியன்தாழ்வு, யாழ்ப்பாணம். 2ம் பரிசு: கனகசபாபதி நாகேஸ்வரன், அம்பனை, தெல்லிப்பளை, 3ம் பரிசு: சண்முகநாதன் தில்லைநாதன், சுழிபுரம் தெற்கு, சுழிபுரம்.

கீழ்ப் பிரிவு:- 1ம் பரிசு: யோககணேசன் சிவசுப்பிரம

வளர்ச்சி 4-ஆம் பக்கம்

# இரு தமிழ்ப் பெரியார்கள் உறவு

## சென்னை கூட்டுப் பிரயாணம் (1846)

### ஸ்ரீலஸ்ரீ கந்தப்பிள்ளை குமாரர் ஆறுமுகநாவலர் அவர்களும் ஸ்ரீலஸ்ரீ அருளம்பல முதலியார் குமாரர் அம்பலவாணமுதலியார் அவர்களும்

சிவபதமடைந்த நாட்டார் பாடல் ஆராய்ச்சியாளர் வட்டுக்கோட்டை மக்கள் கவிமணி மு. இராமலிங்கம் அவர்கள் 1971 ஆம ஆண்டு பெப்ரவரி மாதம் 24-ஆம் திகதி புதன் கிழமை வெளியான "ஈழநாடு" பத்திரிகையில் பின்வருமாறு எழுதுகிறார்.

சென்ற மாதம் யாழ்ப்பாணக் கல்லூரி நூல் நிலையத்தில் பழைய உதயதாரகை இதழ்களைப் படித்துக்கொண்டு போகும்போது, 11-6-1846 இதழில் பின்வரும் செய்தியைக்கண்டு திகைப்புற்றேன்.

இலக்கண இலக்கியங்களில் மகா நிபுணர்களாகிய கனம் பொருந்திய மகாஸ்ரீ அருளம்பல முதலியார் குமாரர் அம்பலவாண முதலியாரும், மகாஸ்ரீ க. ஆறுமுகப்பிள்ளை அவர்களும் சென்னை பட்டினத்திலுள்ள வித்தியாசாலைகளைப் பார்க்கவும், வித்துவான்களைக் காணவும், இந்த மாதம் 8ஆம் திகதி யாழ்ப்பாணத்திலிருந்து பிரயாணப்பட்டார்கள்:

"பைபிள் மொழிபெயர்ப்பு அரங்கேற்றத்தோடு சம்பந்தப்பட்ட பிரயாணமோ, இது அல்லது நாவலர் சரித்திரத்தில் இதுவரை வெளிவராத ஓர் இந்தியப் பிரயாணமோ இது என்பதே என் வியப்பிற்குக் காரணம்"

பைபிள் மொழிபெயர்க்க ஆரம்பிப்பதற்கு (ஆடி 1846) ஒரு மாதத்திற்கு முன் (ஆனி 1846) இப்பிரயாணம் நிகழ்ந்திருப்பதால், நாவலர் சரித்திரத்தில் இதுவரை வெளிவராத ஓர் இந்தியப் பிரயாணம் இது எனக் கொளளல் வேண்டும்?

உடுப்பிட்டி அருளம்பல முதலியார் குமாரர் பெயர் அம்பலவாண முதலியார்; 19ம் நூற்றாண்டில் கோப்பாயில் வாழ்ந்தவர். இவர் வாழ்க்கை வரலாறு நாவலர் பிரபந்தத் திரட்டு (1954) முதற்பாக (பக். 165—166) என்னும் பகுதியிலும், இவரது வம்சாவழி யாழ்ப்பாண வைபவகௌமுதி (பக்: 249-250) யிலும், உதயதாரகை இதழ்களிலும் கூறப்படுகிறது.

நாவலரும் அம்பலவாண முதலியாரும் ஒன்று கூடிய காரணத்தை இனி ஆராய்வோம்

**கூட்டுப் பிரயாணம்:**

உடுப்பிட்டி அருளம்பல முதலியார் 1800 ஆம ஆண்டிற்கு முன்னும், பின்னும் வாழ்ந்தவரென முன்னர் கூறினேம்; (வல்லுபட்டி குமாரசுவாமி முதலியார் இயற்றிய அருளம்பலக் கோவையின் பாட்டுடைத் தலைவன் அவரே போலும் - ஈழகேசரி 14-8-1936 - அந் நூலினை நான் பார்த்ததில்லை.)

நாவலர் காலத்திற்குச் சிறிது முன்னர் அருளம்பல முதலியார் உடுப்பிட்டியில் ஒரு பள்ளிக்கூடத்தை ஆரம்பித்து நடாத்தி வந்தார். தமிழ், ஆங்கிலம். மருத்துவம் சோதிடம், சங்கீதம் யாவும்

வளர்ச்சி 2-ம் பக்கம்

# சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாத யாத்திரை தந்த பேரின்பம்

## கதிர்காம யாத்திரீகருடன் கலந்துரையாடல்

"... மருவு மடியார்கள் மனதில் விளையாடு
மரகதமயூரப் பெருமாள் காண்
மணிதரளம் வீசி அணி அருவி சூழ, மருவு கதிர்காமப்
பெருமாள் காண் ..."

என்ற திருப்புகழைப் பாடிய வண்ணம் "கதிர்காமத்து ஐயனுக்கு அரோகரா-கந்தப்ப சுவாமிக்கு அரோகரா" என்று கனிந்த குரலிற் கூறியபடி, கதிரை மலை யாத்திரையாற் கொணர்ந்த திருநீற்றை அணியத் தந்தார் ஒரு சிவனடியார். பத்தி பரவசமாக அந்த அருமருந்தினைப் பெற்றுக் கொண்டு, அப்பனே! அடியேன் உன் திருவிடத்துக்கு வராவிட்டாலும் உனது அருட் பிரசாதங் கிடைத்து ஆனந்த முற்றேன்; எனப் பிரார்த்தித்துக்கொண்டு அந்த யாத்திரீகருடன் கலந்துரையாடினேன். அவர் கூறிய சிலசம்பவங்கள் மனத்தை உருக்கிவிட்டன. 'நவீன போக்குவரத்து வசதிகள் மலிந்து கொடிப் பொழுதில் மனிதன் நினைத்த இடத்துக்குப் பறக்கிற இந்தக் காலத்திலே, முருகா! முருகா! முருகா! நீயே தஞ்சம் எனக்கூறிக்கொண்டு கால் நடையாக, காட்டு வழி கதிர்காம யாத்திரையை பல நாட்கள் செய்யும் பரம்பரை இன்னமும் இருக்கிறதே என எண்ணி இறும்பூதெய்தி விட்டேன். இதோ அவருடன் சில நிமிடங்கள்:-

(யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிப் பழைய மாணவர் என்று தம்மை அழைப்பதில் பெருமகிழ்வெய்துபவர் இந்த யாத்திரீகர், யாழ், வண்ணையைச் சார்ந்த இவர் "சினி சிங்" பயில்வான் என்றும், சினிவாசகம் என்றும் அழைக்கப் பெறுவார். இவர் பெயர் சி. சிவகுருநாதன் ஆகும்.)

கேள்வி: கதிர்காமம் யாத்திரையால் எப்போது வந்தீர்கள்? இம்முறையும் பாத யாத்திரை தானே! எப்படி?

பதில்: கடந்த சில ஆண்டுகளாக பைசிக்கிள்வண்டியில் யாழ்நகர் — கதிர்காம் செல்லும் பாக்கியம் கிடைத்தது; அந் நாட்களில் எழுந்த ஒரு ஆசை சென்ற ஆண்டும் இவ்வாண்டும் பாத யாத்திரையாக நிறைவெய்தியது.

கேள்வி: இந்த ஆண்டு உங்கள் யாத்திரை எங்கிருந்து எப்போது ஆரம்பமானது?

பதில்; 22 5-74 திங்கட்கிழமை பிற்பகல் 3 மணியளவில் யாழ். இந்துக் கல்லூரி ஸ்ரீ ஞான வைரவர் கோவிலில் இருந்து வழிபாடு முடித்துக் கொண்டு எனது பாதயாத்திரையை ஆரம்பித்தேன். அடுத்து, நல்லைக் கந்தன் ஆலயத்தில் தரிசனம் முடித்துக்கொண்டு சாவகச்சேரி, கொடிகாமம், பளை, கிளிநொச்சி, முருகண்டி, மாங்குளம், ஒட்டிசுட்டான், முள்ளியவளை, தண்ணீரூற்று ஆகிய பகுதிகள் வழியாக வற்றாப் பளையை யடைந்து, 29 5-74 ல் அம்பாளுடைய சந்நிதியில் நிகழ்ந்த பொங்கல் விழாவில் பன்னூற்றுக்கணக்கான அடியார்களுடன் கலந்து கொண்டோம்.

கேள்வி: நீங்கள் வற்றாப் பளை அம்மன் ஆலயப் பொங்கல் முடித்துக்கொண்டு புறப் படும்போது எத்தனை பேர் வரை யாத்திரீகர்களாயிருந்தீர்கள்?

பதில்: இந்தப் புனித இடத்தில் நின்றும் நாம் புறப்படும் அமையம் சுமார் ஆயிரம் அடியார்கள் வரையில் இப் பாத யாத்திரையில் கலந்து கொண்டனர். அதுமட்டுமல்ல இந்தயாத்திரைக்கோஷ்டியில் செல்லும் வழிகள் தோறும் அடியார்கள் கூட்டமாகவந்து வந்து கலந்துகொண்டனர்

கேள்வி: கதிர்காமம் பாத யாத்திரையில் உங்களுக்கு வழி காட்டுபவர்கள் யார்? பெற்ற அனுபவங்கள் என்ன?

பதில்; வழி காட்டுபவர் திருமுருகன்தான் என்பது என் நம்பிக்கை. எங்கள் யாத்திரைக் கூட்டத்தில் கடந்த எட்டு பத்து ஆண்டுகளாக யாத்திரை செய்யும் உத்தமர்கள் இருக்கிறார்கள் என அறிந்து திருப்தியடைந்தேன். சில சந்தர்ப்பங்களில் அடியவர்களுட் சிலர் பெருமானது பெரும்புகழைப் பக்தியோடு பாடுவர்; சிலர் திருநடனம் ஆடுவர். சிலர் களைப்படைந்து இருப்பர், பின்பு அடியவர்களுக்கு உற்சாகமூட்டிக்கொண்டு ஓடுவர். பாடுவர் அருள்வார்த்தைகளுரைப்பர் பாத யாத்திரையில் பெற்ற ஆனந்தம் சொல்லுந்தரமன்று பலரும் பரவச நிலை பெற்றதை நான் கண்டுகொண்டேன் கதிர்காமப் பாதயாத்திரை என்னை பாரத நாட்டுக்கும் பாத யாத்திரை செய்து வர வேண்டும் என்னும் எண்ணத்தை ஏற்படுத்தியிருக்கிறது. இனி, திருவுளம் எப்படியோ?

கேள்வி: பாத யாத்திரையில் எத்தகையவர்கள் கூடுதலாகக் கலந்து கொண்டனர்?

பதில்: பக்த கோடிகளே பெரும்பாலும் கலந்துகொண்டனர். பெரும் அறிஞர்கள், இளைப்பாறிய ஆசிரியர்கள், எழுத்தாளர்கள் இப்படிப்பலரும இருந்தார்கள்; பிரபல எழுத்தாளராய் விளங்கிய அமரர் திரு. வி. என். வி. பாலசுப்பிரமணியம் (ஈழநாடு) குச்சவெளி போஸ்மாஸ்ரர் குழுவினர், வேல் கோஷ்டி முத்துக்குமாரு கோஷ்டி, ஆண்டிச்சாமி கோஷ்டி இப்படிப் பலவேறு குழுக்கள் கலந்து கொண்டார்கள்.

சங்கோசை முழங்க, சேமக்கல நாதமும், மாதேவன் அருட் புகழ் ஒலியும் இலங்க, குழுளமுனை, செம்மலை, புல்மோட்டை குச்சவெளி, நிலாவெளி, சாம்பல் தீவு, திருகோணமலை, தம்பலகாமம், கிளிவெட்டி. வெருகலம்பதி, வாழைச்சேனை, செங்கலடி, மட்டக்களப்பு தருக்கள்மடம் கல்முனை. அக்கரைப்பற்று, கண்டி, பொத்துவில். பாணமை, உகந்தமலை, குமுக்கன் ஆறு, மலைகண்டவெளி ஆகிய பல்வேறிடங்களினூடாகவும் சென்று 17-7 74 புதன் கிழமை மாலை கதிர்காமம் சேர்ந்தோம். ஆங்கு வழிபாடு புரிந்தோம். இந்த யாத்திரை ஒரு பெரும் பேறு என்று உறுதிகொள்கிறோம் இராமகிருஷ்டமடம் வழமை போல அரிய பணியாற்றுகிறது இம்முறை அடியார்கள் தொகை வழமைபோல் இல்லை மிகவும் குறைவாயிருந்தது

"நாயன்மார் — நாதன்!"

### கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்

வழ: இல. M. B. 12161

1. முத்து சின்னப்புவும் 2. பெண் சின்னம்மா
வண்ணார்பண்ணை, தென்கிழக்கு, யாழ்ப்பாணம்.

எதிராக —வழக்காளிகள்

அச்சுவேலி வடக்கு, யாழ்ப்பாணம்.
1. ஷை மத்தீசு தேவசகாயம்
2. ஷை பெண் மரியம்மா —எதிராளிகள்

யாழ்ப்பாணம் மாவட்டக் கோட்டின் M B 12161-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி கீழ விபரிக்கப்படும் ஆதனம் 1974ம் ஆண்டு புரட்டாதி மாதம் 19-ம் திகதி (19—9—74) வியாழக்கிழமை காலை 10 மணியளவில் அவ்வாதனத்துக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப் படும்,

தீர்வைத்தொகை:- ரூபாய் 5490/- இன்னும் 24-11-70 — 3-12 71, ரூபா 3000/-க்கு 12 வீத வட்டியும் இன்னும் கூட்டிய தொகைக்கு 3-12-71 தொடக்கம் முழுப்பணம் இறுக்கும் வரைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 34?-30

#### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப் பகுதி அச்சுவேலிக் கோவிற்பற்று அச்சுவேலி இறை கட்டைப்புளியடி நி பர 3 குளி 12¼ கிணறும எல்லை கிழக்கும், வடகும்:- வாய்க்கால்; வடகு:- சித்தர் கந்தையாவுக்குடையவாதனம், மேற்கு:- முருகன் சரவணைக்குடையவாதனம், இவ்வெல்லைக்குள் இருக்கும் கலவீடு பிற நீங்கலாக, சொரியலாய் ½ பங்கு

"சந்நிதி வேல்" கா. முத்துக்குமாரு
விநாயகமுதலியார் ரோட்டு, கொமிஷனரும் விலைமதிப்பாளரும்
பருத்தித்துறை. 22-8-74. 168 — 74

### கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்ட மன்றில்

வழ. இல M B 13108

உரும்பராய் கந்தையா கைம்பெண் இரத்தினம்

எதிராக —வழக்காளி

யாழ்ப்பாணம் கொக்குவில் கிழக்கு பிரம்படி
1. சந்தையா நல்லையாவும் பெண்
2 பரமேஸ்வரியும்

எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 13108-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் துண்டுக்காணியை 1974ம் ஆண்டு ஐப்பசி மாதம் 2-ந் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை: முதல் வட்டி ரூபா 6157-50 இதில் ரூபா 4500-க்கும் 13-5-72 தொடக்கம் 29-3-73 வரைக்கும் 100-க்கு 10 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 400-70 (செலவழித்த செலவு ரூபா 256-35 வெலியாத்துச் செலவு ரூபா 59 எதிர்வரும் செலவு ரூபா 85-35 கொடுபட வேண்டியிருப்பதாலும்.

#### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி நல்லூர் கோயிற்பற்று கொக்குவில் கிழக்கிறை "குரக்கன் சாட்டி" பர. நில. 6 ஆறும் இதில் தெற்குப்பக்கமாக பர. நில. 3 மூன்று இதற்கு தெற்குப்பக்கமாக பர. நில. 2 இரண்டும் பயிர்வகைகளும் சொல்லப்பட்ட பர. நில (3) இரண்டுக்கும் எல்லை கிழக்கு இராசநாயகம் பெண் புவனேஸ்வரியினுதனம் வடக்கு மிகுதி ஆதனம் மேற்கு பிரம்படி ஒழுங்கை தெற்கு சிவசுப்பிரமணியம் பெண் செல்லமுத்துவினுதனம் இதடங்கலும் அதைச் சேர்ந்தவைகளும்

24, 1ம் குறுக்குத்தெரு க. சுப்பிரமணியம்
யாழ்ப்பாணம் கொமிஷனரும் விலைமதிப்பாளரும்
26-7-74 165. 30

### கோட்டு விற்பனவு விளம்பரம்

இல M B / 13443

காரைநகர்களபூமி கொட்டைபுலம்
1. சிற்றம்பலம் முருகேசு
2. பெண் பொன்னம்மா
— வழக்காளிகள்

எதிராக

யாழ்ப்பாணம் மின்சார வீதி
3-ம ஒழுங்கை
1. முதலையா தருமலிங்கம்
2, பெண் கனகம்மா
— எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின M. B. 13443-ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப் படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1974ம் ஆண்டு செப்டெம்பர் (புரட்டாதி) மாதம் 17-ம் திகதி (17-9-74 செவ்வாய்க்கிழமை முற் பகல் 10-00 மணி தொடக்கம அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில என்னால் விற்கப்படும

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 15,160/-ம் இதில் ரூபா 11,000/- க்கு 14-10-72 திகதி தொடக்கம் 19-6-73 திகதி வரைக்கும் 100 க்கு 10 வீத வட்டியும் பின் திகதி தொடக்கம் முழுத் தொகைக்கும் 100 க்கு 5 வீத வட்டியும் கோட்டுச் செலவ ரூபா 685-84 சதம். இதில் ரூபா 1500/- 6-1-74 லும் 31-1-74ல் ரூபா 500/-ம் கோட்டுச் செலவில் ரூபா 250/-ம் இறுபட்டது.

#### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணைக்கோவற்பற்று வண்ணார்பண்ணை தென்கிழக்கிறை 'தாய்கிக் குளங்கரையும் எருத்துவான் வயல் வரமபும் மறு பிரிவுகளும் நிலப்பரப்பு ஒன்றும் குளி 9. 9/20 ம் வீடும் கிணறும பயிர்களும் எல்லை கிழக்கு அந்திரேசு சிறில் பெண் பாக்கியலட்சுமியின் ஆதனம். வடக்கு கிருஸ்ணசாமி பெண் பரமேசுவரியின் ஆதனம மேற்கு ரோட்டு, தெற்கு கார்த்திகேசு பெண் இராசமமாவின் ஆதனம். இதடங்கலும்.

முற் பதிவு D 324/186,
சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner, Valuer
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
தெல்லிப்பளை, 27-6-74.
171 30 8.74

### கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ, இல. M B 13670

அரியாலை பாடசாலை ஒழுங்கை
1. வேலுப்பிள்ளை கைம் பெண் பொன்னம்மா 2 கார்த்திகேசு இரங்கநாதன் —வழக்காளிகள்

எதிராக

அரியாலை சுப்பிரமணியம் வீதி
சுப்பிரமணியம் தருமலிங்கம்
— எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 13670ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1974ம ஆண்டு செப்டெம்பர் (புரட்டாதி) மாதம் 16-ம திகதி (16-9-74) திங்கட்கிழமை பிற்பகல் 4-00 மணி தொடக்கம் முறையே அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல்வட்டி ரூபா 5917-50 சதமும். இதில ரூபா 4500/- க்கு 24-2-73 திகதி தொடக்கம் 21-6-73 திகதி வரைக்கும் 100 க்கு 12 வீத வட்டியும் பின் திகதி தொடக்கம இறுபடும வரைக்கும 100க்கு 5வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 520-20 சதம.

#### ஆதன விபரம்

வட மாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி சுண்டிக்குளிக் கோவிற்பற்று சுவியாதெரு இறை "கலட்டி புலம்" நிலப் பரப்பு 2, 5/6 ம் கல்வீடும் செய் பயிர் வான் பயிர்களும் எல்லை கிழக்கு நாகலிங்கம் கனகலிங்கம் பெண் பத்மாவதியின் ஆதனம். வடக்கு குகதாசன் பெண் சற்குணவதியின ஆதனம், மேற்கு ரோட்டு. தெற்கு கந்தையா மயில்வாகனத்தின ஆதனம், இதடங்கலும்,

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
கொமிசனரும் விலைமதிப்பாளரும்
தெல்லிப்பழை, 27-7-74.
173, 30-8-

## இருதமிழ்ப்பெரியார்

1-ஆம் பக்கத்து வளர்ச்சி

இலவசமாகக் கற்பிக்கப்பட்டன. அருளம்பல முதலியார் இறந்த பின்பு அவர் குமாரர் அம்பலவாண முதலியார் அப்பள்ளிக்கூடத்தை பரிபாலித்து வந்தார்.

1845 ஆம் ஆண்டு பேர்சிவல் - நாவலர் உறவு மெலிவுற்றதெனப் பாவலர் சரித்திரத் தீபகமும் (பக். 32) உதய தாரகையும் கூறுகின்றன. 1846ம் ஆம் ஆண்டு தை மாதம் முதலாக, நாவலர் பிள்ளைகளைச் சேர்த்துக் கற்பிக்கத் தொடங்கினார். யாழ்ப்பாணத்திற் கல்வி வளர்ச்சியில் ஈடுபட்டு உழைத்த அம்பலவாண முதலியாரும், ஆறுமுக நாவலரும் தாய் நாட்டிலுள்ள வித்தியாசாலைகளைப் பார்க்கவும, வித்துவான்களைக் காணவும் அவ்வாண்டு ஆனி மாத்தில் மேற்கூறிய இந்தியப் பிரயாணத்தை மேற்கொண்டார் போலும்.

1847 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 31 ஆம் திகதி வண்ணார்பண்ணைச் சிவன் கோவிலில் நாவலர் நிகழ்த்திய கன்னிப் பிரசங்க வைபவத்திற்கு இவ் அம்பலவாண முதலியார் அவர்களே தலைமை தாங்கினார் எனவும் கூறப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

இல, எம். பி. 12275

மஹியாப்பிட்டி, சண்டிலிப்பாய், ராமலிங்கம் சரவணமுத்து —வழக்காளி

எதிராக

சண்டிலிப்பாய் வடக்கு, 5ண்டிலிப்பாய், இளையவன் செல்வராசா —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 12275ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும ஒரு துண்டுக்காணியை 1974ம் ஆண்டு புரட்டாதி மாத 16ம் திகதி (16-9-7ம) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அந்தக் காணிக்குள் நின்று என்னல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல் வட்டி ரூபாய் 2500/- இன்னும் ரூபாய் 1500/-த்துக்கு 31-1-71தொடக்கம்18-11-71 வரைக்கும் 12 வீத வட்டியும் அதன்மேல் மூழுத்தொகைக் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 368-51 சதம் முதலில் ரூபாய் 1000/-மும் செலவில் ரூபாய் 125/- கொடுபட்டுள்ளது

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்கு மானிப்பாய் கோயிற்பற்று சண்டிலிப்பாயிறை "சிவிலினை" பர. நி. இலா: 6, 5/8, புதிதாகக் கட்டப்பட்ட வீடு, செய்பயிர் வான்பயிர்கள், கிழக்குப் பக்கத்திலிருக்கும் கிணற்றில் பங்கும். அக்கிணற்றுக்குச் செல்லும் வழி வாய்க்காலுருத்தும், இதற்கெல்லை கிழக்கு:- ஒழுங்கை, வடக்கு:- சுப்பிரமணியம் சரவணமுத்துவினுரிமையாளரினுதனம், மேற்கு:- எதிரிக்கும் பங்காளருக்குமுரிய வாதனம், தெற்கு:- கட்பர் கதிரவேலுவுக்கும் பங்காளருக்குமுரிய வாதனம்.

பதிவிலக்கம்: F. 332-286

செ. விசாகரெத்தினம்

கொம்மிஷனர்& விலைமதிப்பாளர்.

133 பருத்தித்துறை ரோட்டு.

நல்லூர், யாழ்ப்பாணம்,

3-07-74 179—74

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ: இல. M B 13319

யாழ்ப்பாண மாவட்ட மன்றில்

நல்லூர்,

(1) ஆறுமுகம் இளையையாவும் பெண்

(2) மேரியும் —வழக்காளிகள்

எதிராக

யாழ்ப்பாணம். அரியாலை, தற்போது மன்னார் அரசினர் ஆஸ்பத்திரி.

(1) கதிர்காமு செல்லக்கண்டுவும் பெண்

(2) மரகதமும் எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 13319 இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் துண்டுக்காணியை 1974ம் ஆண்டு ஐப்பசி மீ 4-ம் திகதி (4-10-74) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:

முதல் வட்டி ரூபா 2914-36 இதில் ரூபா 1700-00க்கும் 20-8-72தொடக்கம் 28-11-72 வரைக்கும் 100க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 431-95 (செலவழித்த செலவு ரூபா 260-15 வெலியாத்துச் செலவு ரூபா 95-00 எதிர்வரும் செலவு ரூபா 78-70) கொடுபடவேண்டியிருப்பதாலும.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்றிக் யாழ்ப்பாணப் பகுதி சுண்டிக்குளி கோவிற்பற்று சிவியாதெரு இறை 'ஆராட்சிப்புலம்' (Aradchi-pulam) பர. நி. 2 இதில் தெற்குப் பக்கமாக குளிகள் 6 (ஆறும்) நீண்டகால அட்சிப்படி பர. நி. 2/3 (ஒன்றில் இரண்டும்) இரு துண்டுகளும் சேர்ந்து ஒரு துண்டு ஆன முறையில் பர. நி. 1 (ஒன்றும்) வீடும், செய்பயிர் வான் பயிர்களு, எல்லை கிழக்கு:- ஆறுமுகம் பொன்னையாவினுதனம், வடக்கு:- காந்தி நிலயம், மேற்கு:- ஒழுங்கை, தெற்கு:- ஆறுமுகம் பெண் சீதேவியினுதனம்.

க. சுப்பிரமணியம்

கொமிஷனரும்விலைமதிப்பாளரும்

யாழ்ப்பாணம். 26-7-74, 166-74

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

இலகுப்பிள்ளை இராசதுரை கட்டுவன் தெற்கு, ஏழாலை வடக்கு ஏழாலை. —வாதிகள்

இல: எம். பி. 13767 எதிராக

(1) நாகன் கைம்பெண் முத்தி (2) நாகன் கோவிந்து

(3) நாகன் தர்மலிங்கம் (4) மருதன் சிவலிங்கமும்

(5) பெண் தங்கமணியும் (6) நாகன் மகள் பூங்கிளி

(7) நாகன் மகள் மகேஸ்வரி யாவரும் கட்டுவன் வாசிகள் —பிரதிவாதிகள்

மல்லாகம் மாவட்டக் கோட்டின் M. B 13767ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் துண்டுக்காணிகளை 1974ம் ஆண்டு செப்டெம்பர் மீ 12ம் திகதி (12-9-74) வியாழக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் எனனல் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல் வட்டி ரூபா 5173-87ம, 18-4-1973 தொடககம 18-10-1973 வரைக்கும் ரூபா 3000/-க்கு 8 வீத வட்டியும் அதன் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 611-90

### ஆதன விபரம்

(1) வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி தெல்லிப்பளைக கோவிற்பற்று கட்டுவன் இறை கப்பனையும் நொச்சியாவெல்லையும் நி பர. 6¼ பனைகளும், செய்பயிர் வான் பயிர்களும் வடகிழக்கேயிருக்கும் கிணற்றிற் பங்கும் வாய்க்காலும் வழியும எல்லை கிழக்கு:- முடிக்குரிய ஆதனமும் மறுபேருக்குமுரிய ஆதனம், வடக்கு:- சின்னத்தம்பி ஐயம்பிள்ளைக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம், மேற்கு:- வல்லிபுரத்துக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம், தெற்கு:- வேலன் கந்தனுக்குரிய ஆதனம். இவ்வெல்லைப்படி இதடங்கலிற் சொரியலாய் ½ பங்கிற் சொரியலாய் 9/10 பங்கும் அதற்குச் சேர்ந்தவைகளும்.

(2) ஷை கட்டுவனிறை நாவலடி நி. பர 4 இரண்டு புளிய மரமும் எல்லை கிழக்கு:- கணபதி முருகனுக்கும் மறுபேருக்குமுரிய வாதனம், வடக்கு:- கந்தன் மாணிக்கத்துக்கும் மறுபேருக்குமுரிய வாதனம், மேற்கும் தெற்கும்:- ஒழுங்கை இவ்வெல்லைப்படி இதடங்கலும.

க. சிவஸ்கந்தா

நாகேந்திரமடம், நீதிமன்ற விற்பனை ஆணையாளரும்

வட்டுக்கோட்டை, 6-7-74. மதிப்பாளரும்

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

அருணசலம் கசிரவேலு, சுழிபுரம். —வழக்காளி

வழ- இல. M B 12939 எதிராக

வேலன் பெரியான், "யாமாலை" சுழிபுரம் கிழக்கு, சுழிபுரம். —எதிராளி

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தின் M B 12939ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1974ம் ஆண்டு புரட்டாதி மாதம் 27-ம் திகதி (27-9-74) வெள்ளிக்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீரவைத்தொகை:- முதல் வட்டி ரூபா 4642/-ம், 26-1-72 தொடக்கம் 15-12-72 வரைக்கும் ரூபா 3000-00க்கு 9 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 279-72½

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் மேற்குப் பிரிவு சங்கானை கோவிற்பற்று சுழிபுரம் இறை 'தெற்குத் தோட்டம்' நிலப்பரப்பு 5 குளி 9 புளிய மரங்களும் பனை மரங்களும். மேற்கு எல்லையிலுள்ள கிணற்றில் அரைவாசிப் பங்கும், எல்லைகள் கிழக்கு:- ஆறுகன அடியுள்ள புதிய முன்பக்க ஒழுங்கையும், வேலன் பெரியானும் அவரது மனைவி இலட்சுமியின ஆதனம். வடக்கு:- கதிர்காமர் கிருஷ்ணரதும் பங்குதாரர்களினதும் பொன்னுச்சாமியின் கைம்பெண் தெய்வானையினதும், இராமலிங்கம் கந்தையாவினது தத்துவக்காரர்களினதும், இராமலிங்கம் சின்னத்துரையினது தத்துவககாரர்களினதும் ஆதனங்கள், மேற்கு:- இராமலிங்கம் சினனததுரையினது தத்துவக்காரரினது ஆதனமும், இந்தக காணியில் உள்ள கிணற்றுக்குச் செல்லும் ஆறுகன அடியுள்ள புதிய ஒழுங்கையிலிருந்து செல்லும் 4½ அடி புதிய கை ஒழுங்கையும், தெற்கு:- 4½ அடி கைஒழுங்கையும், ஆறு கன அடியுள்ள புதிய ஒழுங்கையும் கிணற்றில் பங்கும் கிழக்கெல்லைக் காணிக்கு பங்கு வழிவாய்க்கால் உரிமை தவிர்த்து. அது முழுவதடங்கலும். யாழ்ப்பாணத்தில் பதிவு செய்யப்பட்டது, E. 334/286

க, சிவஸ்கந்தா

நாகேந்திரமடம் நீதிமன்ற விற்பனை ஆணையாளரும்

வட்டுக்கோட்டை மதிப்பாளரும்

21-8-74. 169--74

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

A R S இராசரத்தினம் கைம்பெண் மற்றில்லா சுண்டிக்குழி யாழ்ப்பாணம். தற்சமயம் 60 நம்பர், அனுராதபுரம் ரோட், புத்தளம். —வழக்காளி

வழ, இல. M. B 7779 எதிராக

(1) காலஞ்சென்ற பீற்றே அந்தோனிப்பிள்ளை கைம்பெண் தொம்சே பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

(2) கென்றி பெரியதம்பியும் பெண் மாக்கிறெட்டும் இல: 81/1, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

—எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 7779 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் துண்டுக்காணியை 1974ம் ஆண்டு புரட்டாதிமீ 27ம திகதி (27-9-74) வெள்ளிக்கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல் வட்டி ரூபாய் 16500/-ம், 1-11-65 தொடக்கம் 27-5-67 வரைக்கும் ரூபாய் 15000/-க்கு 8 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 972-31 சதம் இம் முழுத் தொகையிலும் முதலால் ரூபாய் 18000/- செலவால் ரூபாய் 350/- கழித்து மிகுதி முழுவதும்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி சுண்டிககுளி கோவிற்பற்று கரையூரில் உள்ள அரசநிலையிட்ட முதலியார் வளவு என்னும் 14 குளி நிலமும் அதுள் அடங்கிய வீடும், கிணறும், மலசல கூடமும், வான்பயிர் வளர்பயிர்களும், பிரதான வீதியில் இருந்து இக்காணிக்கு 3 அடி அகலப் பாதை உரித்தும், இதற்கு எல்லை கிழக்கும் வடக்கும்:- R. A. சந்திரசேகராவின் ஆதனம், மேற்கு:- சிசில் பொன்னையாவினதும், காலஞ்சென்ற சுவாம்பிள்ளை பெண்ணின் உரித்தாளரினது ஆதனம், தெற்கு:- மேற்காட்டிய பாதையின் முகப்பும் ஆரியலோட்சுக்குப் போகும பாதையும் இது அடங்கலும். பதிவு இல: D. 226/76

சோ நரசிங்கம் J. P.

தோல்புரம் நீதிமன்ற விற்பனை ஆணையாளரும்

16-8-74. மதிப்பாளரும்.

175-74

---

## கோட்டு விற்பனவு விளம்பரம

வழ. இல. M, B. 13559

புத்தூர். புத்தூர் கிழக்கு.

(1) சின்னத்தம்பி இராசதுரையும்

(2) பெண் சரோஜினிதேவியும —வழக்காளிகள்

எதிராக

நீர்வேலி, நீர்வேலி வடக்கு,

(1) கந்தையா முத்துத்தம்பி

(2) பெண் விஜயலட்சுமி —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 13559ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1974மஆ செப்டெம்பர் (புரட்டாதி மீ 11-மதிகதி(11-9-74, புதன்கிழமை முற்பகல் 10மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 2690/-ம், இதில் ரூபாய் 2000/-க்கு 26-12-72 திகதி தொடக்கம் 1-11-73 திகதி வரைக்கும் 100க்கு 12 வீத வட்டியும் பின் திகதி தொடக்கம் முழுத்தொகைக்கும் இறுபடும் வரைக்கும் 100க்கு 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 445.05 சதம்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப் பகுதி கோப்பாய்க் கோவிற்பற்று நீர்வேலியிறை "அடுக்கலாவயல்" நிலப்பரப்பு 3½ம் மேற்கெல்லைக் காணிக்குள் இருக்கும் கிணற்றுப் பங்கும் வழிவாய்க்கால் பாவிப்புரித்தும், எல்லை கிழக்கு:- சுந்தரம் கனகசபைக்கும், சுந்தரம் நடராசாவுக்குமுரிய ஆதனம், வடக்கு:- கந்தசாமி பெண் வள்ளிப்பிள்ளையின் ஆதனம், மேற்கு:- காலஞ்சென்ற மழவராயர் தம்பையாவின் உருமைக்காரரின் ஆதனம், தெற்கு:- பிரசித்த ஒழுங்கை இதடங்கலும்.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை

தெல்லிப்பளை கொமிஷனர் & விலைமதிப்பாளர்

24-7-74 174-74

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ. இல. M. B. 12019

கம்பளை, மலபார் வீதி, இல: 3 வயித்திலிங்கம் நவரத்தினம் —வழக்காளி

எதிராக

யாழ்ப்பாணம்; கல்வியங்காடு. புலவனர் ஒழுங்கை. தம்பு கதிரித்தம்பி — எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 12019-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1974-ம் ஆ புரட்டாதி மீ 18-ம் திகதி (18-9-74) புதன்கிழமை முற்பகல் 10 மணிதொடகம் முறையே அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல் வட்டி ரூபா 2935/-ம், இதில் ரூபா 2000/-க்கு 25-9-1970 திகதி தொடக்கம் 20-3-1971 திகதி வரைக்கும் 100க்கு 12 வீத வட்டியும் பின் திகதி தொடக்கம் முழுத்தொகைக்கும் இறுபடும்வரைக்கும் 100க்கு 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 288 90 சதம்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப் பகுதி கோப்பாய் கோவிற்பற்று கோப்பாய் தெற்கிறை 'கறள்கச்சி' நிலப்பரப்பு 30 இதில் தென்கிழக்குப் பக்கமாக நிலப்பரப்பு (5) ஐந்தும், செய்பயிர் வான்பயிர்களும் எல்லை கிழக்கு:- வெற்றிவேலு செல்லையாவின் ஆதனம், வடக்கும் மேற்கும்:- மிகுதி ஆதனம், வெற்றிவேலு தம்பு மகள் வள்ளிப்பிள்ளையுடையது. தெற்கு:- வல்லிபுரம் வீரவாகுவின் ஆதனம். இதடங்கலும் இன்னும் மிகுதி ஆதனத்தில் இருக்கும் கிணற்றில் பங்கும் வழிவாய்க்காலும்.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை

தெல்லிப்பளை கொமிஷனர், விலைமதிப்பாளர்

10-7-74 112-74

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்க தண்புனல்
வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையக முந் துயர் தீர்கவே
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

ஆனந்த ஸ்ரீ ஆவணி௴ ௧௪-உ வெள்ளிக்கிழமை [1974]

# வான்முகில் வழாது பெய்க

ஆடி மழையைத் தேடியும் அனுபவிக்க முடியாது அல்லற்படும் கமக்காரர் ஆவணியிலும் அவ்வாறே அவதிப்படுகின்றனர். வெப்ப நிலையோ வெகு விரைவாகக் கூடிக்கொண்டு உச்சத்தில் வந்திருக்கின்றது. சிங்கராசியிற் சூரிய பகவான் ஆட்சி அதிகாரம்பெற்றுச் சஞ்சரிக்கும் காலத்தில் இந்நிலை ஏற்படுவதுண்மையெனினும் வருணதேவனின் கருணையும் இடையே பெருகுவது வழக்கம். அவ்வாறின்றி வெவ்விய காலநிலை தொடர்ந்து பல திங்கள்களாக வடபகுதியை வருத்திவருகின்றதை நோக்குமபோழுது ஈசன் பூசையில் இழுக்குற்றதோ என்று எண்ணி ஏக்கங்கொள்ள வேண்டியிருக்கின்றது.

இயற்கையின் இயக்கத்திலேயே பயிரிட்டுணவுப் பொருள் பெற்று உயிர் வாழ்கின்றனர் இந்நாட்டு மக்கள். வான் முகில்வழாது பெய்வதையே இறைவனை வணங்கும்போழுதெல்லாம் முதற்கண்வேண்டி நிற்பர். மழைவள மில்லா நிலத்தில் மாரியைக் காண்பதரிதே! ஆற்றுநீர் ஊற்றுமின்றேல் ஏற்றுக்கு அவ்வூர்? இந்நிலையில் வந்த மக்கள் இடையறாது இறைவனை ஏத்தியே வான்கருணை பெறுவர் வானமும பொய்த்ததென்றால் ஆன வழிபாட்டிற் குறையுற்றிருக்க வேண்டும.

இன்னலுற்றிடர்படும் இவ்வேளையில் நாம் செய்யக்கூடிய தொன்றேயொன்று. காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி நாதன் நாமம் நாமெல்லோரும் ஓதுதலவேண்டும், ஓயாதோதுதல் வேண்டும். "தோட்டனைத்தூறும் மணற்கேணியென்றுங்கு" ஈசனருளைத் தோட்டனைத்துருகும் கருணை தண்புனல் வீழும். தாரணி வாழும.

*ஏரின் உழவர் இயங்க, பசும்புற்றலை காணச் சிறப்பொடு பூசனை செயற்பட, தானந்தவ மிரண்டும் தங்க உலகம உள்ளவாறமைய உமையொருபாகனை உள்ளும் புறம்பும் தூயராய் நின்று அல்லும் பகலும் வணங்கி மழை வளம் பெறுதலே எமக்கிருக்கும் ஒரே ஒரு வழியாகும்.*

# நெட்டுருப்பண்ணல்

என்னி லாரும் எனக்கினியா ரில்லை
என்னி லும்மினியா னொருவ னுளன்
என்னுளே உயிர்ப்பாய்ப் புறம்போந்து புக்கு
என்னுளே நிற்கு மின்னம்ப ரீசனே.

அப்பர் சுவாமிகள் உலகுக்கு ஈந்த மகோன்னத உபதேசங்களுள் இதுவொன்றாகும். சாதாரணமாக ஒருவன் தன்னையே இனியவனாகக் கருதுகின்றான். தனக்க இன்பத்தைத் தேடி வாழ்கின்றான். தன்னையே பெரியவனாகக் கருதுகின்றான். அந்தப் பாள் எண்ணத்தை மாற்ற இறையன்பை அவர் உபதேசிக்கின்றார். ஆன்மா சுதந்திரமுடையதன்று. சிற்றறிவுடையது. சிவபெருமான் ஒருவரே பரதந்திரர். அவர் பிறரொருவரிலும் தங்கியுள்ளவரல்லர். ஆன்மாவுக்கு வேண்டிய சுக துக்கங்களை அது செய்த நல்வினை தீவினைகளுக்கேற்ப அளந்து கொடுக்கின்றனர் பின் குருவாக வந்து உபதேசஞ்செய்து மல பரிபாகமும் இருவினையொப்பும்வர ஆன்மாவைத் தமது திருவடிக் கீழ்ச் சேர்ப்பவர். இத்தகைய பெரும் பேற்றை நல்குகின்ற இறைவனை அப்பர் சுவாமிகள் 'என்னிலுமினியான்' என்றனர், அது எவ்வளவு பொருத்தமாகும்.

இப்படியான அரிய கருத்துக்களை எங்கள் திருமுறைகளிலும் புராணங்களிலும் நீதி நூல்களிலும் பரக்கக் காணலாம். பிளளைகள் சிறுவயதிலேயே அவற்றை நெட்டுருப்பண்ணல் வேண்டும்.

'இளமையிற் கல்வி சிலையிலெழுத்து' என்பார்கள் மாணவர்கள் சிறுவயதிலேயே இத்தகைய செய்யுட்களை மனனஞ் செய்தல்வேண்டும். முற்காலத்தில் நெட்டுருப்பண்ணுதல் ஒரு சிறந்த அப்பியாசமாகவிருந்தது. இக்காலக் கலவி முறையில் நெட்டுருப் பண்ணுவிக்க வசதிகளில்லை.

ஆனால், பெற்றோர்களும், பிற பொதுநலப் பெரியர்களும் நெட்டுருப்பண்ணும் வழக்கத்தைப் பெருக்குதல்வேண்டும்

திருக்குறள், வாக்குண்டாம், நீதிநெறி விளக்கம் முதலிய நீதிநூற்களில் எவ்வளவரிய மணியான கருத்துக்கள் அமைந்த செய்யுட்கள் இருக்கின்றன. அவற்றைப் பிள்ளைகள் மனனஞ்செய்தால் அவர்களின் அறிவுபெருகும், நற்சிந்தனைகள் பெருகும். நற்சிந்தனைகள் வாழ்க்கைக்கு நல்ல வழிகாட்டியாகும்.

## அணிந்துரை அரங்கம்

## நான் கண்ட நம்பியாரூரன்

ஆசிரியர்: ஈழவேந்தன்
வெளியிடுபவர்:
மா. க. கனகேந்திரன்
150, சுபத்திரராம வீதி,
நுகேகோடை
விலை: ரூபா 1 00

நாடறிந்த நல்ல உரையாளரும், எழுத்தாளருமான "ஈழவேந்தன்" அவர்கள தமது நூல் வரிசையில் "நானகண்ட நமபியாரூர'னையும் நமக்குத் தந்துள்ளார். புதிய கோணத்தில எதையும் அணுகும் தனித்துவ நோக்குடையவர் ஈழவேந்தன். அவ்வாறே இந்நூலிலும் நம்பியாரூரரை தமிழ உணர்ச்சிமிக்கவராகக் காட்டியுள்ளதுடன்; நம்பியாரூரர் தமிழ இசைக்கு புத்துயிர் அளித்த பெருமான் எனறும் நிலை நிறுத்தியுள்ளார்.

"தமிழ் இசைக்குப் புத்துயிர் அளித்த நாயன்மார்களுள் இருவர் தலைசிறந்து விளங்குகின்றனர். இவர்களுள் நாளும் இன்னிசையால் தமிழ பரப்பிய ஞானசம்பந்தர் முதன்மை இடம் வகிக்கின்றார். அதற்கடுத்த நிலை சுந்தரருக்கே உண்டு. இறைவனை 'ஏழிசையாய் இசைப்பயனாய்'' என்றும், "பண்ணிசைத தமிழ் ஒப்டாய்" என்றும், "இருந்து நீ தமிழோசை கேட்கும் இசசையால காசு நித்தல் நலக்கினா' என்றும், இறைவனை இசைவடிவில அதிலும் அதனைத் தமிழ் இசை வடிவில் அந்தத் தமிழ இசைக்காக உருகுகின்ற தன்மையில வைத்து இறைவனைக காண்பதில் எல்லையற்ற இன்பம் கண்டவர் சுந்தரர் என்பது நூலாசிரியரின் கருத்து.

"தமிழுக்கே இனிமை என்பது பொருள். அத்தகைய தமிழுக்கே எத்தகைய அடைமொழிகளை நம் ஆலால சுந்தரர் அள்ளி வழங்கியுள்ளார், இதோ சில எடுத்துக்காட்டுக்கள். "அருந் தமிழ் இன்தமிழ், இன்னிசைத் தமிழ், ஏழிசைத்தமிழ், எண்சீர் உரை தமிழ், ஒலிகொள் இன்னிசைத் தமிழ், குறையாத் தமிழ், அந்தம் மிகு தமிழ, சீரூர் தமிழ், செஞ்சொற் தமிழ், செந்தமிழ், தண்டகந் திணைகொள் செந்தமிழ் நலத் தமிழ், நற்றமிழ், பண்ணாரின் தமிழ், பலங்கிளர் தமிழ். பன்னலத் தமிழ், பாவனைத் தமிழ், வண்டமிழ் இத்தகைய முறையில் இவரிடம் தமிழ் உணர்ச்சி பொங்கி வழிந்து நின்றது. இவரைத் தமிழின் பெருமான் என்று தமிம் உலகம் அழைத்தது". இதுவும் ஆசிரியரின் பிறிதொரு கூற்று.

பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் முகவுரையுடன் கூடிய இந்நூல் தமிழ் ஆய்வுத் துறைக்கு ஒரு வழிகாட்டியாகும்.

## சமய அறிவுப் போட்டி

1: ஆம் பக்கத்தின் வளர்ச்சி

ணியம், நேச விலா, கீரிமலை, காங்கேசன்துறை. 2ம் பரிசு: நவரத்தினம் சுகந்தாதேவி, செந்தாவத்தை, யாவிட்டபுரம், தெல்லிப்பளை, 3ம் பரிசு: சதாசிவம் குமுதமலர், தம்பசிட்டி, பருத்தித்துறை.

## மக்கள் கவிமணி மு. இராமலிங்கம்

அமரர் வட்டுக்கோட்டை மக்கள் கவிமணி மு. இராமலிங்கம் அவர்களது வீட்டுக் கிருத்தியக்கிரியைகள் 1-9-74 ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும்.

## தாலவிலாசம் இலவச வெளியீடு

நவாலியூர் சோமசுந்தரப் புலவர் அவர்கள் இயற்றிய "தாலவிலாசத்தின்" புதிய பதிப்பை மில்க்வைற் சவர்க்காரத் தொழிலதிபர் பூவுலக கற்பகதரு நாயகர் திரு: க. கனகராசா அவர்கள் இலவசமாக வெளியிட்டு வைத்தாகள், இவ்வெளியிட்டு விழா சென்ற 27-8-74 செவ்வாய்க்கிழமை ஆவணி மூலத் திருநாளில், நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக பரமாசாரிய சுவாமிகள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

தொழில முன்னிலைப் பாட விரிவுரையாளர் திரு. சு. பரநிருபசிங்கம் அவர்களும, தீவுப் பகுதி கல்வியதிகாரி திரு. வ. நடராசா அவர்களும், பணியின் பிரயோசனம்பற்றிபபேசினார்கள்.

நூலின் முதற் பிரதியை யாழப்பாணம் காரியாதிகாரி திரு. இ. யோகநாதன் அவர்கள் பெற்று ஆய்வுரை நிகழ்த்தினார்கள. சோமசுந்தரப் புலவரின மைந்தரும் புலவர்மணியுமான திரு. இளமுருகனார் சிறப்புரையாற்றினார்கள.

விழாவில் பெருந்திரளாகக் கூடியிருந்த மக்களுக்கு இலவசமாக நூற்பிரதியை வழங்கிய திரு க கனகராசா அவர்கள் நன்றிகூறி எலலோரையும் பணியைப் பேணுமாறு நயமாக வேண்டினார்கள்.

## உ
## சைவசமய பாடப் பரீட்சை—1974

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையாரால் பாடசாலை மாணவர்களுக்காக ஆண்டுதோறும் நடாத்தும் சைவசமய பாடப் பரீட்சை 3-11-74 இல் நடைபெறும். விண்ணப்ப முடிவு திகதி: 10-9-74 ஆகும்.

ஏற்கனவே விண்ணப்பித்த பாடசாலைகளுக்கு விண்ணப் படிவங்கள் அனுப்பப்பட்டுள்ளன. கிடைக்கப்பெறாதவர்கள் தேவை குறித்து பரீட்சைக் காரியதரிசிக்கு எழுதுக

திறமைசித்திக்கு ஏற்றதாக அகில இலங்கைப் பரிசு தங்கப் பதக்கம், பாடசாலைப் பரிசு ஆகியன வழங்கப்படும.

நேயர் நெஞ்சம்

## ஆனந்த வருடம் ஆவணி மாதத்தில் சுபகருமங்கள் செய்யலாம்

இவ் ஆனந்த வருஷம் ஆவணிமாத அதிகமாசதோஷமில்லை. கிரகம்உச்சமாய் இருத்தலால் தோஷ நிவாரணமாகும. ராகு, புதன் உச்சமாயிருக்கின்றார்கள். ஆதலால் சுபகருமங்கள்செய்ய விதியுண்டு.

இங்ஙனம்
செ. இராசதுரை சாஸ்திரிகள்
வாக்கிய பஞ்சாங்க கணிதா
கொக்குவில். 26-8-74

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ: இல. M B 12815
யாழ்ப்பாணம், பருத்தித்துறை வீதி, 126ம் இலக்கம் சின்னத்தம்பி இரத்தினசபாபதி
எதிராக
(1) சபாபதி கோபாலகிருஷ்ண பிள்ளையும்
(2) பெண் சிவமணியம்மாவும், தலையாளி ஒழுங்கை, திருநெல்வேலி தெற்கு, திருநெல்வேலி.—எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் இல எம் பி 12815-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1974-ம் ஸ்ரீ புரட்டாதி௴ 19ந் திகதி(19-9-74) வியாழக்கிழமை முற்பகல் 10 மணிதொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்,

தீர்வைத்தொகை - முதல்வட்டி ரூபாய் 4880 -00ம், 11-9-1968 தொடக்கம் 1-2-1973 வரைக்கும் ரூபா 3500/- க்கு 12 வீத வட்டியும் அதன் பிறகு முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 452-30.

காணியின் விபரம்

வட மாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி நல்லூர் கோயிற்பற்று திருநெல்வேலி இறை குப்பனைத் தோட்டம் நில பர, 1½ம் கிணறும் வீடும். ஆனால் அளவையின்படியும் ஆட்சிபபடியும் நில பர. 1, குளி 11. இதற்கு எல்லை கிழக்கு பிரதான ஒழுங்கை. வடக்கு முத்துக்குமாரு சிவக்கொழுந்துக்குரிய காணி, மேற்கு அப்புத்துரை பெண் தேவமணிக்குரிய காணி, தெற்கு கனகரத்தினம் பெண் சரஸ்வதியின் உரிமைக்காரரின் காணி. இதடங்கலும் வீடும் கிணறும் மற்றுமதற்குச் சேர்ந்தவைகளும்,

நீ. அன்ரனிப்பிள்ளை
கொமிஷனர் & விலைமதிப்பாளர்
22 கோவில் வீதி,
யாழ்ப்பாணம். 180· 30—

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்.

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறை வீதி, 450ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச அச்சி யந்திரசாலையில், 30—8—1974 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பிரதம ஆசிரியர்: திரு. நம. சிவப்பிரகாசம்
ஆசிரியர்: திரு. மூ. மயில்வாகனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org